பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
21 01 2026 WEDNESDAY 6 30 PM
வணக்கம்-மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1) தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.ம.மு.க. மீண்டும் இணைந்துள்ளது.

2) திமுக அரசை வீழ்த்துவதற்காக தங்கள் கூட்டணியில் அ.ம.மு.க. இணைந்திருப்பது வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) நகராட்சி நிர்வாகத்துறை ஊழல்கள் குறித்து அமலாக்கத்துறை எழுதிய கடிதம் தொடர்பாக திமுக அரசு உடனடியாக வழக்கு பதிவு செய்யுமாறு பாமக வலியுறுத்தியுள்ளது.

4) கறிக்கோழி விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

5) மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - Yashaswini Ghorpade இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுக மீண்டும் இணைந்துள்ளது.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. தினகரன், திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கில் கூட்டணியில் இணைந்துள்ளதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பிஜேபியின் தமிழகத்திற்கான தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான திரு. பியூஷ் கோயலுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. பியூஷ் கோயல், தமிழக நலனுக்கு எதிராக செயல்படும் திமுக அரசை அகற்ற தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ள அனைவரும் உறுதியேற்றுள்ளதாக தெரிவித்தார்.

தமிழக மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை தங்கள் கூட்டணி உறுதி செய்யும் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

தமிழக மக்களின் நலனுக்கு எதிராக செயல்பட்டு வரும் திமுகவை வீழ்த்துவதற்காக, தங்கள் கூட்டணியில் அமமுக இணைந்துள்ளது வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியும், தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுக இணைந்துள்ளதை வரவேற்றுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மக்கள் நலனை கருத்தில் கொண்டு, வாரிசு அரசியலின் பிடியிலிருந்து தமிழகத்தை மீட்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

மாற்றுத் திறனாளிகள் கல்வி பயில்வதற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில், சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன்  குறைபாடு உடையோருக்கான மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், பி.எச்டி பயிலும் 50  மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம்  ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மாற்றுத் திறனாளிகளின் கல்விக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமது அரசு வழங்கும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சனாதன தர்மம் குறித்து, மலிவான கருத்துக்களை தெரிவித்த துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக கருத்தை பதிவு செய்ததற்காக, பிஜேபி ஊடகப் பிரிவு தலைவர் திரு. அமித் மாள்வியா மீது திமுக அரசு பதிவு செய்த வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ரத்து செய்துள்ளது.

இதன் மூலம் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று திரு. உதயநிதி ஸ்டாலின் பேசியது தான் வெறுப்பு பேச்சு என்று தீர்ப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக, திரு. உதயநிதி ஸ்டாலின் மீது வழக்குப் பதிவு செய்யாமல், அதனை விமர்சிப்பது எவ்வாறு வெறுப்பு பேச்சு ஆகும் என்று நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

*நகராட்சி நிர்வாகத்துறை ஊழல்கள் குறித்து அமலாக்கத்துறை எழுதிய கடிதம் தொடர்பாக உடனடியாக வழக்கு பதிவு செய்யுமாறு திமுக அரசை, பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு பணியிட மாற்றம் வழங்கியதற்காக மட்டும். 365 கோடி ரூபாய் அளவிற்கு வசூலிக்கப்பட்டதாக அமலாக்கத் துறை தெரிவித்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார்.*

*இதனை மூடி மறைப்பதற்கான நடவடிக்கைகளில் திமுக அரசு ஈடுபட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.*

>>>>>><<<<<<

*கறிக்கோழி விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.*

*இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினையில் திமுக அரசு உடனடியாக தலையிட்டு, முத்தரப்பு கூட்டத்தை நடத்தி உரிய தீர்வு காணுமாறு கோரியுள்ளது.*

>>>>>><<<<<<

*மின்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் மின்துறை தொடர்பான வருடாந்திர மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.*

*மின்துறை சீர்திருத்தங்கள், மின்விநியோக இழப்பை தடுப்பதில் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் மின்துறை முக்கியப் பங்கு வகிப்பதாக திரு. மனோகர் லால் கூறினார்.*

>>>>>><<<<<<

*பிரதமரின் தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் தேனியில் இன்று நடைபெற்றது.*

உதவித்தொகையுடன் தொழில் பழகுநர் பயிற்சி வழங்கப்படுவது தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று இதற்காக பதிவு செய்தவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் – பயனாளிகள் 34 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் நாளை மறுநாள் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – செந்தாமரை 41 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் வரும் 28ஆம் தேதி நடைபெறவுள்ளதை ஒட்டி, அதுகுறித்த ஆய்வு கூட்டம் மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் திரு. பிரவின் குமார் இன்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

காஞ்சிபுரத்தில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணமில்லா பேருந்து சேவை பதிவுக்கான சிறப்பு முகாம், வரும் வெள்ளிக்கிழமை தொடங்கி 31ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தென்காசி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் உதவி மையத்தை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

கடலூர் மாவட்டத்தில் மாணவர்களின் கல்வி தேர்ச்சி விகிதத்தை உயர்த்துவது குறித்து, ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார், ஆசிரியர்களுடன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, ஆட்சியர் திருமதி. அழகுமீனா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - Yashaswini Ghorpade இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-6, 7-11, 10-12, 14-12, 11-8 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் Iskender - Sarvinoz Mirkadirova இணையை வென்றது.

மற்றொரு கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்று, Manush Shah - Diya Chitale இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில், Manush Shah-வும், மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிக்கா பத்ராவும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-11, 16-21, 21-16 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Wang Tzu Wei-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

நாக்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற நியூஸிலாந்து முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

>>>>>><<<<<<